# I AM THE MESSIAH OF THIS ERA

# நான் இந்நூற்றாண்டின் மஸீஹ்

**வெள்ளிக்கிழமை குத்துபா** 31-01-2014

## FRIDAY SERMON

# HAZRAT MUNIR AHMAD AZIM (A)

உலக மக்கள் அனைவருக்கும் சமாதான வாழ்த்துக்களை தெரிவித்து, தஷஹ்ஹுத், தஅவ்வுசும் சூரா பாத்திகாவும் ஓதிய பிறகு கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது ஆஸீம் (அ) அவர்கள் இவ்வாறு கூறினார்.

**“நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உண்மையான மார்க்கம் இஸ்லாம் ஆகும்”** (3-20)

மனித வாழ்வுக்கு இஸ்லாம் உண்மையான பாதையென்றால், அப்பாதை வழியாக பயணம் செய்ய தகுந்த முன் மாதிரிகையே ஆவார் தூய தூதர் முஹமது (ஸ) அவர்கள். ஏனெனில் நல்லவர்களும், தீயவர்களும் வாழும் இந்த தற்காகமான உலகில் அல்லாஹ்வின் ஒரு உண்மையான அடியான் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு முற்றிலும் சிறந்த முன்மாதிரிகையாக நபி(ஸ) விளங்குகின்றார்.

மனிதனை முழுமைப்பெற செய்கின்ற புனிதமான மார்க்கபோதனைகளாகும் இஸ்லாம் வழியாக அல்லாஹ் மனுகுலத்திற்கு வழங்கியிருப்பது. மனித வாழ்வின் உண்மையான நோக்கம் இவ்வுலகின் லௌகீகமான சுகங்களேயும் ஆனந்தங்களேயும் அனுபவிப்பதோ அடைவதோ இல்லை. இவையனைத்தும் இன்றிருந்து நாளை போகின்றதேயாகும். ஆனால் நம்மை அனைவரையும் படைத்திருப்பவனோ, அவன் என்றென்றும் நிலைநிற்பவனும் அனைத்தையும் நிலைநிறுத்த கூடியவனும் ஆவான். அவனுக்கு ஆரம்பமோ இறுதியோ இல்லை என்பது போலவே அவனது வல்லமைக்கும் ஆற்றலுக்கும் எல்கையும் கிடையாது என்று மட்டுமல்லாமல் அவனது உதவியும் தோற்றவும் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டதுமாகும்.

இப்பூவுலகில் உண்மையான ஒரு மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த முன்மாதிரிகை ஆவார் ஹஸ்ரத் முஹ்மது (ஸ). அவர் வாழ்ந்திருந்த காலயளவில் தனது வாழ்க்கை மூலமாக தூய்மையும் நேர்மையுமான ஒரு வாழ்க்கை முறையை மக்களுக்கு கற்பித்தார். அவர்களின் அந்த முன்மாதிரிகை அக்காலகட்டத்தின் மக்களுக்காக மட்டுமல்லாமல் இறுதிநாள் வரையிலும் தோன்றுகின்ற அனைத்து மனிதர்களுக்கும் வேண்டியவையாகும்.

திருமறை வழியாக அல்லாஹ் இவ்வாறு தெரிவிக்கின்றான்

**“மக்களுடைய பயனுக்காக தோற்றுவிக்கப்பட்ட நீங்கள் மற்றெல்லாரையும் விட நீங்கள் சிறந்த கூட்டத்தினுடையவர் ஆவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையிருந்து தடுக்கின்றீர்கள். மேலும் அல்லாஹ்விடம் நம்பிக்கை கொள்கின்றீர்கள். வேதத்தையுடையவர்களும், நம்பிக்கை கொண்டிருந்தால் அது அவர்களுக்கு சிறந்ததாக இருந்திருக்கும் அவர்களில் நம்பிக்கை கொண்டோர்களும் சிலர் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் கட்டுப்படாதவர்கள்”** (3-111).

அதேபோன்றே திரு குர்-ஆன் மூலமாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

**“செவியேர் பலரே தூய்மையானவாக்கு பற்றியே உண்மைநிலையை அல்லாஹ் எவ்வாறு விளக்கியுள்ளான் என்பதை நீர் காணவில்லையா? அது தூய்மையான ஒரு மரத்தைப் போன்றது. அதன்வேர் உறுதியாக நிலை பெற்றுள்ளது. ஒவ்வொரு காலத்திலும் அது தன் இறைவனின் அனுமதியுடன் தனது புத்தம் புதிய பழத்தை வழங்குகின்றது. மக்கள் அறிவுரையினை பெற**

**வேண்டுமென்பதற்காக அல்லாஹ் அவர்களுக்கு உருவகங்களை விளக்குகின்றான். கெட்டவார்த்தையின் விலை பூமியிருந்து பிடுங்கி எறியப்பட்ட, மேலும் தனக்கு எங்கும் நிலையில்லாத கெட்ட மரத்தைப் போன்றதேயாகும். நிலைத்து நிற்க கூடியதும் தூய்மையானதுமான அந்த வார்த்தைக் கொண்டு அல்லாஹ் நம்பிக்கை கொண்டோர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் உறுதியை வழங்குகின்றான். மேலும் அநீதி இழைப்பவர்களை அல்லாஹ் வழி தவற விடுகிறான். மேலும் அல்லாஹ் தான் விரும்புவதை செய்கின்றான்''.** (14-25,28).

இஸ்லாம் அழகும், செழிப்பும் நிறைந்த ஒரு பூந்தோப்பு ஆகும். அந்த பூந்தோப்பிற்கு அன்பார்ந்த அளவிலான பேணுதல் அனுதினம் அவசியமாகும், அவ்வாறேயானால் அப்பூந்தோப்பில் செடிகள் யாவும் அழகான பூக்களையும் ருசியான பழங்களையும் தந்துவிடும். ஒவ்வொரு மனிதனும் அவ்வாறு ஒவ்வொரு செடிகளாக மாறி, நம்பிக்கையை பாதுகாத்தும், சுய ஆத்மீக முன்னேற்றத்தை அனுதினம் பார்வையிட்டும், அல்லாஹ்வின் விருப்பத்தை மட்டும் நாடியும், அவனது திருப்திக்கு ஏற்றவாறு செயல்பட்டு வாழவும் செய்தால் அச்செடி என்றென்றும் செழிப்பாகவும், பலன் தருவதாகவும் இருக்கும். ஆனால் அப்பூந்தோப்பை மனிதன் கைவிட்டுவிட்டால் அந்நிலையில் அதை தொடர செய்ய அல்லாஹ் அனுமதிப்பதில்லை. ஏனெனில் அல்லாஹ் அவனது திருமறையில் வாக்குறுதி வழங்கியிருப்பதன்படி இஸ்லாம் என்றென்றும் அவனது கரங்களால் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்று மட்டுமல்லாமல் இஸ்லாமிக போதனைகளையும் அதன் சட்டதிட்டங்களையும் எட்டி மிதிக்க அவன் எவரையும் அனுமதிக்கவுமாட்டான் என்பதேயாகும். இஸ்லாமிற்கு கேடுபாடுகள் ஏற்கின்ற வேளைகளிலெல்லாம் அப்பூந்தோப்பை எவ்வாறு பாதுகாக்க வேண்டுமென்றும் பேணிக்கொள்ள வேண்டுமென்றும் மனிதர்களை கற்பிக்க அல்லாஹ் அவனது பிரதிநிதியை தேர்ந்தெடுத்து அனுப்பிவைப்பான். அல்லாஹ்வின் அருள்மூலமாகவும் அந்த பிரதிநிதி ஆற்றிய கடமைகளின் காரணமாகவும் அந்த பூந்தோப்பு மறுபடியும் பூக்கவும் காய்க்கவும் ஆரம்பிக்கின்றது. அதுவழியாக மனிதர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து விடுகின்றனர். நேர்மையும் தூய்மையும் அடைந்துவிடுகின்றனர். அதற்கேற்ப அல்லாஹ் அவர்களுக்கு பலனையும் வழங்குகின்றான்.

குறிப்பாக முஸ்லீம்கள் அவர்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு செயல்களும், இஸ்லாமிக சட்டதிட்டத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்ளாமருந்தால் அதாவது இஸ்லாமாகும் புனித பூங்காவனத்தை அனுதினம் பேணிக்கொள்ளாமல் போனால் அதன் அழகு இழந்து, வடிவமான அப்பூக்களின் நறுமணம் கெட்டு அவையாவும் தொலைந்து போய்விடும். மற்றொரு வகையில் கூறினால் எல்லா நிலையிலும் முழுமைப் பெற்ற ஒரு கட்டிடம் காலகரணப்பட்டு அதில் கேடுபாடுகள் ஏற்றென. ஆனால் அக்கட்டிடத்தின் உரிமையாளர் அதை கவனிக்காமலும், சரி செய்யாமலும் இருந்தால் அது பரிபூரணமாக இடிந்து மண்ணோடு சேர்ந்துவிடும். வேறொரு வகையில் சொன்னால், ஒரு வீட்டுக்குள் வாழும் அனைவரையும் கொடிய நோய் தாக்கியப்பிறகும் ஒரு மருத்துவருடைய தேவையில்லை என்று பிடிவாதம் செய்தால் அந்நோய் காரணமாக அனைவரும் இறந்துவிடுவார்கள். ஆகவே திருகுர் ஆனுடையவும் திரு சுன்னத்தினுடையும் கடந்த கால பாடங்களினுடையவும் அடிப்படையில் பார்த்தால் ஒன்று மிக தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். அதாவது மனிதகுலத்திற்கு மோட்சத்தை அடைய இன்று பூவுலகில் அமைந்திருக்கும் ஒரேயொரு மார்க்கமேயாகும் தீனுல் இஸ்லாம். அது இறுதி நாள் வரையிலும் நிலைநிற்கும் என்ற அல்லாஹ்வின் வாக்குறுதியின்படி அந்த உண்மையான மார்க்கத்தை பாதுகாப்பது அவனது கடமையே ஆகும். அதனால் இஸ்லாம் சீர்குலைகின்ற நேரத்திலெல்லாம் அதை சீரமைக்க அல்லாஹ்வே நேரடியாக அவனது பிரதிநிதியை தேர்ந்தெடுத்து அனுப்பிவைப்பான். அதுவழியாக இஸ்லாமின் பூங்காவனம் எல்லாவித புழு பூச்சிகளிருதும் முழுமையாக பாதுகாக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

திருகுர் ஆனுடையவும் திரு சுன்னத்தினுடையவும் அடிப்படையில் மஸீஹினுடையவும் மஹ்தியுடையவும் வருகை இஸ்லாமின் வளர்ச்சிக்கு எல்லா நிலையிலும் அவசியமேயாகும். மஹ்தியுடையவும் மஸீஹ்னுடையவும் தோற்றத்தை குறித்து நபி(ஸ) அவர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

‘‘உங்களுடைய இமாம் ஆக ஈசப்னு மரியம் உங்களிருந்து தோன்றும் போது உங்களின் நிலமை எவ்வாறாகுமோ’’. (புகாரி).

இந்த நபிமொழியை முற்றிலும் தவறாக விளக்கப்பட்டன. அதன் விளைவாக 2000 வருடங்களாக ஈசப்னு மரியம் உயிருடன் ஆகாயத்தில் இருக்கின்றார் என்றும், இறுதியில் அவர் மனித குலத்தின் இரட்சகனாக அவதரிப்பார் என்றும் ஒரு வீண்நம்பிக்கை உருவாகியது. அத்தவறான நம்பிக்கையோடு இன்று வாழுகின்ற முஸ்லீம் சகோதரர்களிடம் நான் கூறிக்கொள்கின்றேன். இந்த நம்பிக்கையின் காரணமாக இஸ்லாமின் தூய தூதர் முஹமது(ஸ) அவர்கள் இழிவுக்கும், ஏளனத்திற்கு ஆளாகிவிடுகின்றார் என்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். அனைத்து உலகையும் படைப்பதற்கு மூலகாரணமானவன் என்றும் படைப்பினங்களில் வைத்து சிறந்தவன் என்றும் அலாஹ்வே தெரியப்படுத்தியிருக்கும் காத்தமுன் நபியீன் ஆன தூய தூதர் முஹமது முஸ்தபா(ஸ) அவர்கள் ஏனைய நபிமார்களைப் போன்று மரணத்தை தழுவியிருக்க, மரியமின் மகனாகிய ஈசாநபி (அ) மட்டும் கடந்த 2000 வருடங்களாக ஆகாயத்தில் வாழ்ந்திருக்கின்றார் என்று நம்பிக்கை கொள்வதா? சற்று யோசியுங்கள். நாம் திருமறையில் இவ்வாறு காண்கின்றோம்.

**‘‘உமக்கு முன்னர் எந்த மனிதர்களுக்கும் என்றென்றும் வாழும் மிக நீண்ட வாழ்க்கையை நாம் வழங்கியதில்லை. எனவே நீ மரணித்து அவர்கள் மட்டும் என்றென்றும் (மிக நீண்ட நாள்) உயிருடன் இருப்பதாக?’’** (21:35)

முஸ்லீம் சமுதாயத்தை சீர்திருத்த 2000 வருடங்களுக்கு முன் வாழ்ந்திருந்த ஈசா நபி அவதரிப்பார் என்று நாம் நம்பிவிடுவோமேயானால், உண்மை மார்க்கமான இஸ்லாமை ஏற்றுக்கொண்டிருக்கும் தூதவ அரசன் முஹமது(ஸ) அவர்களின் கோடிக்கணக்கான தோழமைக்கூட்டத்தில் ஒருவர் கூட நல்லவராக இல்லை என்றும் அனைவரும் சீரழிந்து முற்றிலும் கெட்ட ஜந்துக்கள் ஆகிவிட்டார்கள் என்றும் ஆகவே 2000 வருடங்களுக்கு முன் யூத சமுதாயத்தை சீர்திருத்துவதற்காக தோன்றிய ஈசாநபி என்பவர் மறுபடியும் வந்து இந்த சமுதாயத்தை சீரமைக்கவேண்டும் என்ற பரிதாபமான நிலை இஸ்லாமுக்கு உண்டு என்றும் நாம் நம்ப வேண்டும்.

இஸ்லாம் மதத்தை இழுவுப்படுத்த கூடிய இத்தகை எண்ணங்களோடும் நம்பிக்கையோடும் வாழும் முஸ்லீம்கள் திருமறையின் 3-ம் அதிகாரத்தில் 49,50-ம் வசனங்களை கவனிக்க நான் கேட்டுகொள்கின்றேன்.

**‘‘அல்லாஹ் அவனுக்கு வேதத்தையும், ஞானத்தையும் தவ்றாத்தையும் இஞ்சீலயும் கற்றுக்கொடுப்பான். அவர் இஸ்ராயின் மக்களுக்கு தூதர் ஆவார்’’.**

மேல் கூறிய வசனத்தின் அடிப்படையில் பார்த்தால் மனிதகுலத்தை அனைத்தும் சீர்திருத்தகூடிய ஒரு தூதராக ஈசா நபிக்கு எப்படி தோன்றமுடியும்? அப்படியென்றால் இஸ்ரவேன் மக்களுக்கான தூதர் என்ற சொல்லுக்கு பதிலாக மானிடகுலத்திற்கான தூதர் என்று மாற்றி எழுத இந்த முஸ்லீம்கள் ஆயத்தமாவார்களா?

ஈசாநபி(அ) மின் இரண்டாம் வருகையை குறித்து மேல் சுட்டிக்காட்டிய நபிமொழியைப் பற்றி நாம் யோசித்தால். அந்தநபி மொழிக்குள் அதற்கு பதிலும் இருப்பதாக காணலாம். நபி(ஸ) வின் வார்த்தை எல்லா நிலையிலும் முழுமைபெற்றதும் தெளிவானதும் ஆகும். அச்சொல்லுக்கு எதிராக விளக்கமளிக்க எவருக்கும் அதிகாரமில்லை. **‘‘உங்களிருந்து உங்கள் இமாமாக ஈசப்னு மரியம் தோன்றும் போது உங்கள் நிலமை எவ்வாறிருக்கும்’’.** இந்த நபிமொழியில் உங்களில் இருந்து என்ற வார்த்தை இரண்டிடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது விளக்கமளிப்பது இவ்வாறாகும். அதாவது, முஸ்லீம் சமுதாயத்திருந்து மஹ்தி தோன்றுவரேயன்றி மற்றேதேனும் சமுதாயத்திருந்தல்ல என்பதாகும். இதற்கு வேறொரு விளக்கம் அதாவது, பூவுலகில் நின்றே மஹ்தி அவதரிப்பார் என்றல்லாமல் வானத்திருந்து இறங்கி வருவார் என்பதல்ல.

இயேசுவுக்கு முன்னவே ஆகாயத்திருந்து எயா வரவேண்டும் என்பது ஒரு தீர்க்கதரிசனத்தின் அடிப்படையாகும். எயாவின் வருகையைக் குறித்து இயேசுவிடம் கேட்டபோது, எயா வந்துவிட்டார் என்றும் அவர் ''யோவானே'' ஆவார் என்றும் அதாவது எயாவின் வருகை யோவானில் முழுமைபெற்றுவிட்டது என்று இயேசு பதிலளித்தார்.

(மத்.17:10-13, மாற்கு 9:11-13, லூக்கா. 1:17)

ஏதேனும் ஒரு நபியின் தோற்றத்தை குறித்து தீர்க்கதரிசனம் இருந்தால் அதன்பொருள் அந்நபியின் மனதளவிற்கும் குணமளவிற்கும் அதிகார அளவிற்கும் சமமான மற்றொருவர் தோன்றுவார் என்பதேயாகும். மாறாக, இறந்துபோன அந்த நபியை இரத்தத்தாலும் மாம்சத்தாலும் மறுபடியும் உருவாக்கி தோற்றுவிக்க வேண்டும் என்பதல்ல. இதுவே உண்மை.

**ஆகவே இஸ்லாமையும் முஸ்லீம்களையும் அல்லாஹ் கைவிட்டுவிடவில்லை. ஏனெனில் நூறு வருடங்களுக்கு முன் இஸ்லாமிக மக்களை தூய்மைப்படுத்த வாக்களிக்கப்பட்ட முதல் மஸீஹ் இவ்வுலகில் அவதரித்தது போன்று இஸ்லாமின் வெற்றிக்கான ஞானஒளியுமாக இதோ இரண்டாவது மஸீஹாக நான் தோன்றியிருக்கின்றேன். இஸ்லாமின் தோட்டத்திருந்து இழந்து போன அழகையும், செழிப்பையும் மறுபடியும் அமைத்துவிடவும் அதுவழியாக இஸ்லாமின் உண்மையை நிரூபித்து விடவும் ஆகும் எனது வருகையின் நோக்கம். இது ஒவ்வொரு ஆத்மாவுக்கும் மகிழ்ச்சியை தரும். ஒவ்வொரு விழிகளுக்கும் இது குளிர்மையை வழங்கும். இதன் ஆத்மீகமான நற்பலன் காரணமாக ஒவ்வொரு உள்ளங்களும் இறை அழகால் ஒளித்துவிடும்.**

தூதுவ அரசன் முஹமது(ஸ) அவர்கள் கூறினார்கள். வாக்களிக்கப்பட்ட மஹ்தியும் மஸீஹீம் ஒருவரே ஆவார் என்று. அந்த மஹ்திமஸீஹ் ஒரு நபியாகவே இருப்பார் என்பதில் எவ்வித சந்தேகவுமில்லை. அவருக்கு புதிய ஷரியத்து இருக்காது. தூதுவ மன்னன் முஹமது (ஸ) வின் திருவார்த்தைகளிருந்து மிக தெளிவாக புரிந்து கொள்ள முடியும் ஒரு உண்மை என்னவென்றால் அதாவது இறுதி ஷரியத்தை மக்களுக்கு கற்பிக்க ஒரு மஹ்தியல்ல ஏராளமான மஹ்திகளும் மஸீஹ்களும் தோன்றுவார்கள் என்பதேயாகும். இஸ்லாமிற்கு எப்போதெல்லாம் அபாயம் ஏற்படுகின்றதோ அதன் சட்ட திட்டத்திற்கும் அழகுக்கும் மேன்மைக்கும் எப்போதெல்லாம் கேடுபாடுகள் விளைகின்றதோ அப்போதெல்லாம் மஹ்திகள் மஸீஹ்மார்களாக தோன்றிக் கொண்டிருப்பார்கள். எனது முஸ்லீம் மக்களே இது எக்காலவும் உங்களுக்காக அல்லாஹ் வழங்கியிருக்கின்ற நற்செய்தியே ஆகும். அல்லாஹ்விலும் அவனது பிரியமான நபி முஹமது (ஸ) விலும் நாம் வைத்துள்ள விலைமதிக்க இயலாத அன்பிற்கும், பண்புக்கும் பதிலாக கிடைக்கும் அருளே ஆகும் இது. மஹ்திமார்கள் மஸீஹ்மார்கள் என்பது மனுகுலத்திற்கு அனைத்தும் தூய்மையான முன் மாதிரிகையாக விளங்குகின்ற ஹஸ்ரத் முஹமது முஸ்தபா(ஸ) வை நேசிக்கின்றோர்களுக்கும் கீழ்படிகின்றோர்களுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் வழங்கும் பரிசே ஆகும். அல்லாஹ்வே ஜமாஅத்தே சஹிஹில் இஸ்லாமின் ஒவ்வொரு நபரையும் உனது அருள்கொடைகளால் போர்த்துவாயாக. அல்லாஹ்வே உனது வெற்றியை எங்கள் வழியாக திறக்க செய்வாயாக. அல்லாஹ்வே இந்நூற்றாண்டில் இந்த எளியவன் மூலமாக நீ வெளிப்படுத்தியிருக்கும் இறையருளை ஜமா அத்தே சஹிஹில் இஸ்லாம் வழியாக ஒக்கவைப்பாயாக. இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

*Issued by:* R. Jamaludin Raother, Amir
Jamaat Ul SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
**Phone: 09447001832**

**Translated by:**
**Azim Ahmad**
***Sadr Sahibul Faraj***
**Kerala / Tamil Nadu**
**09789180817**